சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள்: 19.11.2025
வா.சா.2 – தாஜிதீன் S/o முகமது ராவுத்தர்
O.S. No.186/2022
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

என் மாமியார் நாகூரம்மாள் 1996ல் காலமாகிவிட்டார். என் மாமியார் நாகூரம்மாள் காலமானபிறகு தான் தாமரைச்செல்வி இந்த வழக்கின் 1ம் பிரதிவாதிக்கு நான் சுவாதீனம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல, நான் சுவாதீனம் கொடுக்கவில்லை. நான் அனுபவித்துகொள்ளும்படி கொடுத்தது ஒய்யம்மாளுக்கு தான். 1ம் பிரதிவாதியின் கணவரான ஹரிஹரமுருகன் என்பவரிடம் ஒரு பெருந்தொகையை பெற்று கொண்டு வழக்கு சொத்தை சுவாதீனம் ஒப்படைத்து, விற்பனைக்காக வாய்மொழியாக ஒப்பந்தம் போட்டுவிட்டு, வெளிநாட்டிற்கு சென்றுவிட்டு வந்து பத்திரம் முடித்து கொடுப்பதாக வாக்குறுதிகொடுத்துவிட்டு தற்போது அதை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்திருக்கும் வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் ராமலிங்கம் பிள்ளை அவர்களின் குமாரத்தி 79 வயதுள்ள R.அங்கயற்கண்ணி அம்மாள் 1ம் தரப்பினராக என்று என்னுடைய மனைவியின் கிரைய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அங்கயற்கண்ணியினுடைய இறப்பு சான்றிதழ் சாட்சியிடம் காட்டப்பட்டு அதில் அங்கயற்கண்ணியின் தகப்பனார் பெயர் ராமலிங்கம் பிள்ளை என்று குறிப்பிடப்பட்டுள்ளதாக கேட்கப்பட்டது சாட்சி அதை பார்வையிட்டு தனக்கு தெரியாது என்று மறுக்கிறார். மேற்படி அங்கயற்கண்ணி 25.10.1986ல் மதுரை அரசு ராசாசி மருத்துவமனையில் மரணமடைந்துவிட்டார் என்றும், 06.10.1988ல் அங்கயற்கண்ணி அம்மாளும் அவரது மகன் ராமலிங்கமும் சேர்ந்து எனது மனைவிக்கு எழுதி கொடுத்ததாக போலியான ஒரு ஆவணத்தை உற்பத்தி செய்து தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் இறப்பு சான்றிதழாக தாக்கல் செய்யப்பட்ட

ஆவணம் பொய்யாகும். இறப்பு சான்றிதழ் பொய்யான ஆவணம் ஆகும். ஆகவே நான் இந்த வழக்கில் கேட்டிருக்கும் பரிகாரமானது என் மனைவிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.11.19 21:15:22 +0530

Sub Judge

Melur